# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,505 — 1958 අගෝස්තු 27 වැනි බදාදා — 27.8.1958**

**11,505 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 27 ந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

**உணவு விலைக்கட்டளை இல. ஏ. 43.** — **உப உணவுப் பொருட்கள்.**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்படும் தத்துவங்களைக் கொண்டு அனுராதபுர மாவட்ட விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) டொன் சார்ல்ஸ் லேயனல் அமரசிங்க ஆகிய யான் இக்கட்டளையால் :—

(1) கீழே குறிக்கப்பட்டுள்ள உணவு விலைக்கட்டளைகளை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் :

(அ) 1958 ம் ஆண்டு ஜூன் மாதம் 13 ந் திகதி வெளிவந்த 11,359 ம் இலக்க விஷேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஜூன் மாதம் 11 ந் திகதியைக்கொண்ட ஏ. 39 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக்கட்டளை,

(ஆ) 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 17 ந் திகதி, வெளிவந்த 11,427 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 14 ந் திகதியைக்கொண்ட ஏ. 42 என்னும் இலக்கமுள்ள எனது விலைக்கட்டளை.

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 2 ம் பத்தி (i) ம் (ii) ம் பிரிவிலும் 3 ம் பத்தி (i) ம் (ii) ம் பிரிவிலும் குறிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த விற்பனையாளர்விற்கும் ஆகக் கூடிய மொத்த விற்பனவு விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி யொருவர் பாவிப்பாளரொருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாக நடைமுறைக்கு வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் இவ்விலைகளுக்கு நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்ட பொருட்களை இவ்விலைகளுக்குக் கூடுதலாக இவ்வட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் குறிப்பிடப்பட்ட விஸ்தீரண எல்லைகளுக்குள் விற்கவும் கூடாது.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருளின் எத்தொகையாவது திரும்ப விற்கும் பொருட்டு விற்கும் விற்பனையோ அல்லது 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதில் கூடிய தொகையில் ஒரே தடவையில் விற்கும் விற்பனையோ மொத்த விற்பனையாகவே கருதப்படும்,

(ஆ) குறிக்கப்பட்ட அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருளின் மொத்த அந்தர் ஒன்றுக்குக் குறைந்த எத் தொகையாவது, உணவுத் தேவைக்கோ அல்லது பாவனைக்கோ விற்கும் எவ்விற்பனையும் சில்லறை விற்பனையாகக் கருதப்படும் என வரையறைப்படுத்தி ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து எவராகிலும் 2 ம், 3 ம் பத்தியில் குறிக்கப்பட்ட எல்லைகளுக்குள் விற்றலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலோ அல்லது வாகனத்திலோ வைத்திருக்கும், ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது வாகனத்தில் அப்பொருளுக்கென இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் ஒரு அறிவித்தலைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக “ இருத்தல் ” அல்லது “ இரு ” என்பது “ அவோர்டுபோஸ் ” எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் மிகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்ட விஸ்தீரண எல்லைக்குள், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு பொருளை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்கு பின் வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டுக்கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி,
(ஆ) விற்கப்பட்ட அப்பொருளின் தொகை (நிறையில்),
(இ) விற்கப்பட்ட தொகைக்கு கொடுக்கப்பட்டவிலை,
(ஈ) எவ்விதமான விற்பனை (மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது).

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளையாகிலும் விற்குமிடத்து அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது இட்டுக் கொடுக்கும் கொள்கலம் அவ்விதம் ஏதாவது உபயோகிக்கப்பட்டால், அவைகளின் விலையும் இவ்வட்டவணையின் 2 ம் பத்தியின் (i) ம், (ii) ம் பிரிவுகளிலும் 3 ம் பத்தியின் (i) ம், (ii) ம் பிரிவுகளிலும் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ம் நாள் பகல் 12 மணிக்கு அனுராதபுரக் கச்சேரியில் ஒப்பமிடப்பட்டது.

டி. சி. எல் அமரசிங்க,
பதில் விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), அனுராதபுர மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | | பத்தி 3 | |
|---|---|---|---|---|
| விபரம் | அனுராதபுர நகர சபை வட்டாரம் துலானை இல. 23 (C) யும் கெக்கிருவை நகரசபை வட்டாரமும் உட்பட | | அனுராதபுர நிர்வாக மாவட்டம், அனுராதபுர நகரசபை வட்டாரம், துலானை 23 (C) கெக்கிருவை நகரசபை வட்டாரங்கள் நீங்கலாக | |
| | (i) மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த அந்தரின் மொத்த விற்பனவு விலை | (ii) சில்லறை வியாபாரியின் நிகர இருத்தல் சில்லறை விற்பனவு விலை | (i) மொத்த வியாபாரியின் மொத்த அந்தரின்ஆகக் கூடிய மொத்த விற்பனவு விலை | (ii) சில்லறைவியாபாரியின் நிகர இருத்தலின் ஆகக் கூடிய சில்லறை விற்பனவு விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| வெங்காயம்— | | | | |
| (ஈரவெங்காயம் தவிர்ந்த ஏனைய ரகங்கள்) | 21 77 | 0 24 | 22 02 | 0 25 |
| கொத்தமல்லி | 41 69 | 0 42 | 41 94 | 0 43 |
| சீரகம் | 121 17 | 1 23 | 121 42 | 1 24 |
| செத்தல் மிளகாய் | 77 29 | 0 77 | 77 54 | 0 78 |
| பாசிப்பயறு | 46 74 | 0 47 | 46 99 | 0 48 |
| முழு உழுந்து | 48 51 | 0 49 | 48 76 | 0 50 |
| கடலைப் பருப்பு | 41 42 | 0 41 | 41 67 | 0 42 |
| மைசூர்பருப்பு | 61 99 | 0 62 | 62 24 | 0 63 |
| ஈர வெங்காயம் | 27 02 | 0 30 | 27 27 | 0 31 |
| உருளைக் கிழங்கு | 31 24 | 0 33 | 31 49 | 0 34 |
| மாசி | 252 25 | 2 52 | 252 50 | 2 53 |
| கடுகு | 72 19 | 0 72 | 72 44 | 0 73 |
| உப்பு | — | 0 6 | — | 0 7 |

**குறிப்பு**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.